# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 மே 2002 பகுதி : 5

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 மே 2002 பகுதி : 5

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்

எல்லோருக்கும் தொல்காப்பியம் 153
பேரறிஞர்.நா. பாலுசாமி

திருவள்ளுவரைத் தெரிந்துகொள்ளுங்கள்
நா.பா. 159

பழமொழிகளில் பாலின வெளிப்பாடுகள்
முனைவர் வீ. ரேணுகாதேவி 173

ஒழுக்கமும் ஓர் உயர்கல்வியே
சு.கு. பன்னீர் செல்வம் 185

சேக்சுபியரின் சில துன்பியல் நாடகங்களில்
வள்ளுவரின் அறநெறிக் கருத்துக்கள்.
பா. சூரியநாராயணன் 189

# எல்லோருக்கும் தொல்காப்பியம்

*பேரறிஞர் நா. பாலுசாமி*
முன்னிதழ்த் தொடர்ச்சி

**(எழுத்து - புணரியல்)**

சூத். 131

*இன்னென வரூஉம் வேற்றுமை உருபிற்கு*
*இன்னென் சாரியை இன்மை வேண்டும்*

(ப-ரை) இன் என வரும் வேற்றுமை உருபிற்கு - இன் என்னும் வேற்றுமை உருபிற்கு முன், இன் என் சாரியை - இன் என்கிற சாரியை, இன்மை வேண்டும் - இல்லையாகிக் கெடும்.

'இன்' என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபிற்குமுன் 'இன்' என்னும் சாரியை மறையும்; தோன்றாது.
(எ.டு) விளவின் வீழ் பழம்; பலாவின் நீங்கினான். சிறுபான்மை 'இன்' கெடாதும் வரும்,
(எ-டு) பாம்பினிற் கடிது தேள்.

சூத். 132

*பெயரும் தொழிலும் பிரிந்தொருங்கு இசைப்ப*
*வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்*
*தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்*
*ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணிச்*
*சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது*
*இடைநின்று இயலும் சாரியை இயற்கை*
*உடைமையும் இன்மையும் ஒருவயின் ஒக்கும்*

(ப-ரை) பெயரும் தொழிலும் - பெயரும் வினையும், பிரிந்து இசைப்ப - பெயரும் வினையுமாகப் பிரிந்து நின்று இசைப்ப, ஒருங்கு இசைப்ப - பெயரும் பெயருமாய்க் கூடி நின்று இசைப்ப, வேற்றுமை உருபு - வேற்றுமை உறுபுகள்,

நிலைபெறுவழியும் - விரிந்து நின்றவிடத்தும், தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண்ணும் - விரியாமல் மறைந்து வேற்றுமைத் தொகையாக நின்றவிடத்தும், ஒட்டுதற்கு ஒழுகிய - தாம் பொருந்துதற்கு ஏற்ற, வழக்கொடு சிவணி - இருவகை வழக்கத்தொடு பொருந்தி, சொல்சிதர் மருங்கில் - சாரியை பெறும் புணர்மொழிகளைப் பிரித்துக்காணுமிடத்து, வழிவந்து விளங்காது - பின் வந்து விளங்காமல், இடை நின்று இயலும் - இடையில் நின்று இயங்கும். சாரியை - சாரியையானது, ஒருவயின் - ஓரோவிடத்து, உடைமையும் இன்மையும் - வருதலும் வாராமையும், ஒக்கும் இயற்கை - ஒத்துவரும் இயற்கையை உடையது.

பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பிரிந்து புணர்ந்த இடத்தும், பெயர்ச்சொல்லும் பெயர்ச்சொல்லும் இணைந்து புணர்ந்தவிடத்தும், வேற்றுமை உருபுகள் மறைந்தும் மறையாமலும் நிற்குமிடத்தும், இருவகை வழக்கிலும், புணர்மொழிகள் பிரிந்து நிற்குங்கால், சொல்லின் ஈற்றில் வந்து புணரும் சாரியை போலாது, நடுவில் வந்துநிற்கும் சாரியை ஓரோ வழித் தோன்றலும் தோன்றாமையும் இயற்கையாம்.

(எ-டு) மரத்தை வெட்டினான், மரத்தினை வெட்டினான் -
(அ) இவ்வாறு வேற்றுமை உருபு நிற்கும்போது சாரியை உடைமையும் இன்மையும் ஒத்தன. இவ்வாறே பிற உருபுகளுக்கும் காண்க. பெயரும் தொழிலும் பிரிந்து புணர்ந்தன.

ஆ) விளவினைக் குறைத்தவன்; தாலிக்குப் பொன் - இவை ஒருங்கு இசைப்ப உருபு நிலை பெற்றன. பெயரும் பெயரும் ஒருங்கிசைத்தன.

இ) வானத்தின் வழுக்கி, வானத்து வழுக்கி - சாரியை பெற்றும், பிரிந்து இசைத்து ஐந்தன் உருபு நிலை பெற்றும் பெறாமலும் வந்தன.

ஈ) விளவின் கோடு, விளவினது கோடு - ஒருங்கிசைத்துச் சாரியை பெற்றவழி ஆறன் உருபு தொக்கும் தொகாதும் நின்றது.

குறிப்பு: இச்சூத்திரத்தின் இறுதி அடியை 'ஒடுவயின் ஒக்கும்'என்று பாடம் கொள்ளுதலும் உண்டு.

சூத். 133 :

*அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்*
*ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே*
*அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே*

(ப-ரை)

அத்து வற்று அ இரு மொழிமேல் ஒற்று - அத்தும் வற்றும் ஆகிய இரு சாரியைகள் மேல் நின்ற ஒற்று, மெய் கெடுதல் - தன் வடிவம் கெடுதல், தெற்று என்று அற்று - தெளியப்பட்டது, அவற்றுமுன் வரும் - அவ் இருசாரியைகள் முன் வரும், வல் எழுத்து - வல்லின எழுத்துக்கள், மிகும் - மிக்கு முடியும்.

அத்து, வற்று - இவ் இருசாரியைகள் முன் வருமொழியில் வரும் வல்லெழுத்துகள் மிக்கு முடியும், அங்கு ஒற்று கெடும்.

(எ-டு) கலம் + அத்து + குறை = கலத்துக்குறை
அவ் + வற்று + கோடு = அவற்றுக்கோடு

நிலைமொழிகளில் உள்ள ஈற்று மகரமும் வகரமும் கெட்டு வல்லெழுத்து மிக்கது. முன்னதில் அகரமும் கெட்டது.

சூத்.134 :

(எழுத்துச் சாரியைகள்)

*காரமும் கரமும் கானொடு சிவணி*
*நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை*

(பொ.ரை) காரம், கரம், கான் - இம்மூன்றும் எழுத்துச் சாரியைகளாம்.

(எ-டு) 'ஆ' என்பதனை ஆகாரம் என்றும், 'அ' என்பதனை அகரம் என்றும், 'ஐ' என்பதனை ஐகான் என்றும் கூறலாம்.

சூத். 135:

*அவற்றுள்.*
*கரமும் கானும் நெட்டெழுத்து இலவே*

(பொ-ரை) முற்கூறியவற்றுள் கரம், கான் ஆகிய இரு சாரியைகளும் நெட்டெழுத்துக்களுக்கு வாரா. எனினும் ஒரோ வழி வரும் எனக் கொள்க (எ-டு) ஐகாரம், ஐ கான்; ஔகாரம் ஔகான் என நெட்டெழுத்துப் பெற்றமை காண்க.

சூத். 136 :

*வரன்முறை மூன்றும் குற்றெழுத்து உடைய*

வரலாற்று முறைமையை உடைய மேற்கூறிய மூன்று சாரியைகளும் குற்றெழுத்துப் பெற்று வருதலை உடைய.
(எ-டு) மகரம், மகாரம், மஃகான் என வரும்.

சூத். 137 :

*ஐகாரம் ஔகாரம் கானொடும் தோன்றும்*

நெட்டெழுத்துக்களுள் ஐகார ஔகாரங்கள் முன் விலக்கப்பட்ட கானொடும் தோன்றும்.
(எ-டு) ஐகான், ஔகான்.

சூத். 138 :

*புள்ளி ஈற்றுமுன் உயிர்தனித்து இயலாது*
*மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே*

(பொ-ரை) புள்ளி ஈற்றுச் சொல் முன்னர் வந்த உயிர் முதன்மொழியின் உயிர் தனித்து நடவாது; அப்புள்ளியொடும் கூடும். அப்போது, தனித்து நிற்கும் தன் இயல்பினை உயிர் இழக்கும்.

(எ-டு) பால்+அரிது = பாலரிது

ல்+அ=ல (அகர உயிர் லகர மெய்யின்மேல் ஏறியது) வருமொழி ‘அ’ தன் இயல்பினை இழந்து ‘ல்’ என்பதோடு கூடி ‘ல’ என ஆயிற்று.

சூத். 139 :

***மெய்யுயிர் நீங்கின் தன்னுரு ஆகும்***

மெய்யெழுத்தின்மேல் ஊர்ந்த உயிர் நீங்கினால், மெய் தனது இயல்பான வடிவினை அடையும்.

(எ-டு) க்+அ=க. 'க' என்னும் உயிர்மெய்யில் அகரம் நீங்கின், தன் முன் வடிவினை ககரமெய் அடையும். (க்).

சூத்.140:

*(உடம்படுமெய்)*

***எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே***
***உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்***

நிலைமொழி, வருமொழி முதலிய எவ்வகையான மொழிக்கும், உயிர் முதன்மொழி வருமிடத்து, உடம்படு மெய்யைப் பெற்றே உயிர் புணரும்.

(எ-டு) கிளி+அழகிது = கிளியழகிது. 'ய' கர உடம்படு மெய் பெற்றது.

பூ+அழகிது= பூவழகிது. 'வ' கர உடம்படுமெய் பெற்றது. யகரமும் வகரமும் (ய்+வ்) உடம்படுமெய்களாம். மர+அடி= மரவடி. மரம் விகாரப்பட்டு 'மர' என நின்றது. இவ்வாறும் உடம்படுமெய் வரும்.

சூத்.141 :

***எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி***
***இசையில் திரிதல் நிலைஇய பண்பே***

(பொழிப்பு) எழுத்துக்கள் மாறாமல் ஒருதன்மையாக நின்று, பொருள் விளங்க நிற்கும் புணர்மொழிகள், எடுத்தல், படுத்தல், நலிதல் என்கிற ஓசை வேறுபாட்டால் புணர்ச்சி வேறுபடுதலை நோக்குக.

இசைதிரிதல் - ஓசைவேறுபட உச்சரித்தல். பொருள் தெரி - பொருள் நன்கு புலப்படும்படியான.

(எ-டு) செம்பொன் பதின்தொடி - என்னும் தொடரை ஓசைவேறுபடுத்தி, 'செம்பு ஒன்பதின் தொடி' எனப்பிரித்துப் புணர்த்தும்போது பொருளும் வேறுபடுதல் காண்க. இவ்வாறே, 'செம்பருத்தி' - செம்பு+அருத்தி எனப்பிரிந்து பொருள்

வேறுபடுவதும் காண்க. இவற்றில் எழுத்துக்கள் மாற்றமின்றி ஓசை வேறுபாடுமட்டில் உள்ளது.

சூத்.142 :

***அவைதாம்.***
***முன்னப் பொருள புணர்ச்சி வாயின்***
***இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே***

(பொழிப்பு) பலபொருள்தரும் புணர்மொழிகள்தாம், குறிப்பால் உணரும் பொருளுடையன; புணர்ச்சியிடத்து இத்தன்மைய என்னும் எழுத்து முறைமை உடையன அல்ல.

முன்னம் - குறிப்பு. எழுத்துக்கடன் - எழுத்து முறை. (எ-டு) செம்பொன்பதின்தொடி - குறிப்பால் பொன்னை நினைத்துக் கூறினால் பொன் எனவும், செம்பை நினைத்துக் கூறினால் செம்பு எனவும் உணரப்படும். இங்கு ஒலிவேறுபாடேயன்றி, எழுத்துமாற்றம் இல்லை என்பது உணரத்தகும்.

(புணரியல் முற்றும்)

- தொடரும்.

# திருவள்ளுவரைத் தெரிந்துகொள்ளுங்கள்

- நா.பா.

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

## வலியறிதல்

வலி என்பது வளமை, ஆற்றல், சக்தி, பலம் எனப் பொருள்படும். அறிதல் என்பது ஆராய்ந்து முடிவுக்கு வருதல். ஓர் அரசன் அல்லது ஆட்சித்தலைவன் மேற்கூறப் பெற்ற நால்வகை உபாயங்களுள் கடைசி உபாயமாகிய தண்டம் அல்லது ஒறுத்தல் (பகைவனைத் தண்டித்தல்) என்னும் உபாயத்தை மேற்கொள்ளும் காலக்கட்டம் வந்தால் என்ன செய்தல் வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் தெளிவுபடுத்து கிறார். சக்திகுறைந்த ஆட்சித்தலைவன் (மெலியவன்) முதல் மூன்று உபாயங்களைக் கையாள்வது சிறந்தது. வலிமைமிக்கவன் தண்டோபாயத்தைப் பயன்படுத்த எண்ணும் போது பின்வரும் நால்வகை வலிமைகளையும் சீர்தூக்கிப் பார்த்துத் தனக்கு அவை சாதகமாக இருந்தால் மட்டிலுமே பகைவன் மீது படை எடுத்தல் வேண்டும். நால்வகை வலிமைகளாவன.

1. தான் செய்யக்கருதும் காரியத்தின் வன்மை (வலிமை)
2. செய்து முடிப்போன் தனது வலிமையைப் பார்த்தல்
3. மாற்றானாகிய பகை அரசன் வலிமை
4. இருவர்க்கும் வரும் துணை நாடுகளின் வலிமை

இந்த நான்கு வகையான வலிமைகளுள், வினைவலி என்பது பகைவனது பாதுகாப்புச் சாதனங்களை (அரண் முதலியன) முடக்குதலும், அவற்றை அழித்தலும் ஆகும். ஏனைய மூன்று வலிமைகளையும் சீர்தூக்கிப் பார்த்துத் தன் வலிமை மாற்றான் வலிமையை விட மேலானது எனக் கருதினால், போரைத் தொடங்கலாம். குறைவானது என்றால் பொறுத்துப் பார்த்தல் வேண்டும். வெற்றியில் சந்தேகம் ஏற்பட்டாலும், இருவர் வலிமையும் ஒப்ப இருந்தாலும் செயல்படுதலை நிறுத்திக் கொள்ளல் வேண்டும்.

அன்றியும், தன்னால் செய்யத்தக்க காரியத்தையும், அக்காரியத்திற்கு வேண்டும் வலிமையையும் தெரிந்து கொண்டு, அக்காரியத்தில் அழுத்தமாக நின்று, மனம், மொழி, மெய் ஆகிய

மூன்றாலும் ஈடுபாடு கொண்டு, காரியம் செய்வார்க்கு முடியாதது ஒன்றும் இல்லை, எல்லாப்பொருள்களும் அடைவர் அரசர் என்பதாம். மக்களாட்சி முறையில் அரசர் என்பது பிரதமரையோ, குடியரசுத் தலைவரையோ குறிக்கும் எனக் கொள்க. இந்த அதிகாரம் பெரும்பாலும் போர் பற்றியதேயாம்.

போர்மேற் செல்லும் ஓர் ஆட்சித்தலைவன் தனது உண்மையான வலிமையை (அல்லது) சக்தியை அறியாமல், கட்டுக்கடங்காத மன எழுச்சியால் (உற்சாகத்தால்), தன்னினும் வலிமையுடைய மாற்றரசுடன் மோதத் தொடங்கி, இடையில் வெற்றிமுகம் காண முடியாமல் அழிவைத் தேடிக் கொண்ட ஆட்சியாளர் பலர் இவ்வுலகில் உள்ளனர். எனவே, தனது சக்தியை உணர்ந்தே எதனையும் தொடங்க வேண்டும். இனி, அயல் வேந்தனோடு (அரசோடு) பொருந்திவாழாமல், தன்னை எப்போதும் யார் முன்னிலையிலும் வியந்து ஒழுகுவோன் மிக விரைவில் கெடுவான் என்பது உறுதி. சக்தி இல்லாத ஒருவன் தன்னினும் மேம்பட்ட ஒருவனோடு பகைகொண்டால் விரைவில் அழிவைத் தேடிக் கொள்வான் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

ஓர் ஆட்சியாளன் ஒரு செயலை அல்லது போரை மேற்கொள்ளும்போது தன் வலிமை, தன் துணை வலிமை ஆகிய இரண்டை மட்டும் நம்பி காரியத்தில் இறங்குதல் கூடாது. மாற்றான் வலிமை, அவனது துணைவலிமை ஆகியவற்றையும் ஆலோசிக்க வேண்டும். அன்றியும் தான் ஆற்றல், பொருள், பெருமை ஆகிய மூவகை வலிமைகளைப் பெற்றிருந்தாலும், பகைவர் பலராகத் திரண்டுவரின் வெல்வது அரிது என்பதும் உணரத்தகும்.

மெல்லிய மயில் தோகைகளை ஏற்றிய சகடமும் (வண்டி) அத்தோகைகளை அளவுக்கு மீறி ஏற்றினால், வலிய அச்சினை உடைய வண்டியும் அச்சொடிந்து கவிழலாம். தன்னைவிட மிக எளியவர்கள் (வலி குறைந்தவர்கள்) என்று பலரோடு பகைகொண்டால், தான் வலிமை மிக்கவனாயினும், அப்பகைவர்

பலர் ஒன்று திரண்டு மேல் வந்தால், தனது வலிமை குன்றித் தோல்வியைத் தழுவ நேரிடலாம். ஆகவே, பலர் கூடிய பகையைத் தவிர்க்க என்பது கருத்து.

*"பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்"*

என்னும் குறள் மனங்கொள்ளத்தகும். (பீலி-மயில்தோகை, சாகாடு-வண்டி, பெயின்-பாரம் ஏற்றினால்). இக்குறளால், மாற்றானாகிய பகைவனது வலிமையும் அவனது துணை வலிமையும் அறியாதபோது ஏற்படும் இழுக்குக் கூறப்பட்டது.

இனி, தான் மேற்கொள்ள இருக்கும் வினை (செயல்) எத்தகையது – கடினமானதா, எளிமையானதா – என்பதையும் அறிந்து செயல்படல் வேண்டும். ஒரு மரக்கிளையினது நுனியில் ஏறி நின்றான் ஒருவன், அந்த அளவையும் கடந்து மேலும் ஏற முற்படுவானாயின், அச்செயல் அவனது உயிருக்கே உலை வைத்துவிடும். பகைவரோடு பொருதத் தொடங்கி, தன்னால் ஆகும் அளவும் போரிட்டு நிற்பான் ஒருவன், அவ்வளவில் நில்லாது மன எழுச்சியால் (உற்சாகம்) மேலும் முன் சென்று போரிடின் அவ்வெழுச்சி, காரியம் வெற்றிபெறுவதற்கு உதவாது, அவனது உயிருக்கு ஆபத்தாக முடியும். அஃதாவது, தனது நிலைமை அறிந்து செயல்படவேண்டும். செயலின் வன்மை மென்மைகளை முன்கூட்டி ஆராயாது இறங்கியவன் கெடுவது உறுதி என்பது,

*"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்*
*உயிர்க்கு இறுதியாகி விடும்"*

என்னும் குறளால் தெளிவாகும்.

*பொருள்வலியறிதல்*

வலியறிதல் என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் அனைத்தும் தனிமனித வாழ்வுக்கும் அரசு காரியத்திற்கும் ஒத்த நிலையில் பொருந்தும் என்பதை மறத்தல் கூடாது. அரசியலில் கூறப்படும் அனைத்து அறிவுரைகளும் ஆலோசனைகளும்

ஆட்சியாளர்க்குச் சிறப்பாகவும் குடும்ப வாழ்வுக்குப் பொதுவாகவும் அமைந்துள்ளன. ஒருவன் தான் ஈட்டிய பொருளை அல்லது ஓர் அரசு தனக்கு வரியாக வரும் பொருள் திரளினை எவ்வாறு செலவழித்தல் (வகுத்தல்) வேண்டும் என்பதனைத் திருவள்ளுவர் மிகவும் நுட்பமாகக் கூறிச் செல்கிறார். "வருவாயுள் கால் வழங்கி வாழ்தல்" என்பது ஆன்றோர் முதுரை. ஓர் அரசு தனக்குப் பல்வேறு துறைகள் வாயிலாக வரும் வருவாயை (செல்வம்) நான்கு கூறாக்கி, இரண்டு கூறுகளை அரசாங்கச் செலவினங்களுக்கு வைத்துக் கொள்ளல் வேண்டும்; ஒரு கூற்றை (பகுதியை) எதிர்பாராத நிலைமைகளைச் சந்திப்பதற்கு (Unexpected expenditure) வைப்பு நிதியாகவும் (Reserve Fund), நான்காம் பகுதியைப் பிறநாட்டினர் உதவி வேண்டினால் கொடுத்து உதவுவதற்கும் என வகைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதுதான் பொருளைச் சிதையாமல் பேணி வரும் வழி. ஒருவருடனும் நீடித்து நட்புக் கொள்ள இயலாத செல்வம் தன்னிடம் இடையறாது தங்குதற்கு உரிய நெறிமுறைகளே மேலே கூறப்பட்டவையாம். கை இருப்பை விடச் செலவு குறையின் செல்வம் ஒரு காலும் நீங்காது என்னும் உண்மையை உணர்ந்து பொருளைச் செலவிடல் அறிவுடைமையாம். அன்றியும், அரசுக்குப் பொருள்வரும் வாய்ப்புக் குறையினும், செலவுக்குரிய வழிகள் பலவாக அகன்றுவிடாமல் பாதுகாத்து வந்தால், ஒரு கேடும் வாராது. முதலும் செலவும் தம்முள் ஒப்பினும் கேடில்லை என்பதாம். வீண் பெருமைக்கும் வேண்டாத விளம்பரங்களுக்கும் செலவழித்து எப்பயனும் எய்தாத நிலை உருவாதல் கூடாது. பின்வரும் குறட்பா இங்குக் கவனிக்கத்தகும்.

*"ஆகுஆறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை*
*போகுஆறு அகலாக் கடை"*

அன்றியும், ஒருவன் தனக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து, அதற்கு ஏற்ப வாழமாட்டாதான் வாழ்க்கை வளமாக இருப்பதுபோலத் தோன்றி, உண்மையில் இல்லையாகிக் கெடும். முதலைவிடச் செலவு கூடுதலால் வரும் கேடு மேலும் வலியுறுத்தப்பட்டது.

இனி ஒரு நாடு பிறநாடுகளுக்கு உதவி செய்ய நேரிட்டாலும், தனது செல்வ நிலையைச் சீர்தூக்கிப் பார்த்து, தனக்கு மிஞ்சியது தான தருமம் என்னும் முதுரையை மனங்கொண்டு ஒப்புரவு செய்தல் வேண்டும். தான் பிற நாட்டிடம் கடன்பெறும் நிலையில் இருக்கும்போது, பிறர்க்கு உதவுவது என்பது அறிவுடைமை ஆகாது. வலியறிதல் என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர், ஒரு தனி ஆள் அல்லது நாடாள்வோன் போராயினும் அமைதிக் காலத்தில் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதாயினும் தன் ஆற்றல், பொருள் முதலிய வலிமைகளை மனங்கொண்டு செயலாற்றல் வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

## *காலம் அறிதல் – அதிகாரம் 49*

நாடுகளுக்கிடையே போர்ச் சூழல் நிலவுமாயின் ஓர் அரசு கவனிக்கவேண்டிய பலவற்றுள் வலியறிதல் போலவே காலம் அறிதலும் இன்றியமையாதது. பகைவர் மீது படையெடுக்க முற்படும் அரசு, அதற்குச் சாதகமான காலத்தை அல்லது பருவத்தை எண்ணிச் செயல்படல் வேண்டும். திருவள்ளுவர் காலம் அறிதல் என்ற அதிகாரத்தில் பின்வரும் செய்திகளை வலியுறுத்தியுள்ளார்.

1. காலத்தின் இன்றியமையாமை அல்லது சிறப்பு
2. காலம் அறிந்து செயல்படுதலால் வரும் நன்மைகள்
3. காலம் வாய்க்கும் வரை செய்யவேண்டுவது
4. காலம் வாய்க்கும்போது செய்யவேண்டுவது

மேற்கூறியவற்றுள் காலத்தின் சிறப்பு பெரும் கவனத்திற்கு உரியது. ஓர் அரசு தன் மூவகை வலிமைகளாகிய வினைவலி, தன்வலி, துணைவலி ஆகியவற்றைச் சீர்தூக்கி, அவை தனக்குச் சாதகமாக இருப்பின், படை எடுக்கும் நிலையில் வெல்வதற்கு ஏற்ற காலச் சூழ்நிலையையும் எண்ணிப்பார்த்தல் வேண்டும். வெற்றி கிட்டுமா? கிட்டாதா? என்பது காலத்தின்பால்பட்டது. இதனைத் திருவள்ளுவர் ஓர் அழகிய உலகியல் உவமையால் விளக்குகிறார்.

கூகை எனப்படும் கோட்டான் வலிமை வாய்ந்த பறவை. காகமோ அதனை நோக்க வலியற்ற பறவை. பொதுவாக இரண்டினுக்கும் பகைநேரின் கோட்டான் காக்கையை மிக எளிதில் வென்றுவிடும். ஆனால் இதற்கும் காலம் வாய்க்க வேண்டும். இரவுபகல் ஆகிய இருவகை நிலைகளிலும் கோட்டானுக்கு வெற்றியும் காக்கைக்குத் தோல்வியும் ஏற்படும் என அறுதியிட்டு உறுதியாகக் கூறல் கூடாது. கோட்டானுக்கு இரவில் மாத்திரம் கண்பார்வை உண்டு. பகலில் பார்வை இல்லை. காக்கைக்குப் பகலில் கண் தெரியும். இரவில் தெரியாது. எனவே, இவற்றுள் ஒன்று பிறிதொன்றை வெல்வதும், வெல்லாததும் நேரத்தைப் பொறுத்தே முடியும். காகம் கூகையைப் (கோட்டானை) பகலில் வென்றுவிடும், இரவில் வெல்லப்பட்டுவிடும். அதுபோலவே, கூகை காகத்தை இரவில் எளிதில் வென்றுவிடும். பகலில் தோற்றுவிடும். இவ்வுவமையிலிருந்து அருமையான போர்த்திறம் பற்றிய உத்தி ஒன்று வெளிப்படும். அதாவது, காலம் கிடைக்காதபோது வலிமையால் பயனில்லை என்பதாம்.

பகைவரை அடக்க அல்லது வென்றி கொள்ள எண்ணும் ஓர் அரசு, அதற்கேற்ற காலத்தை எதிர்நோக்க வேண்டும். காலம் என்பது கடும் வெயிலும் கடும் குளிரும் அல்லாது இரண்டும் சமமாக நிலவி நோய் செய்யாமல், தண்ணீரும் உணவும் உடையதாய்த் தானை (படை) வருத்தமின்றி மேற்செல்லும் இயல்பினதாம். இத்தகைய காலமே வெற்றிக்குரியது. வலிமையற்றவனும் பகைவனுக்குக் காலமல்லாத காலத்தில் படைகொண்டு சென்றால், அவனை எளிதில் வென்றுவிடலாம் என்னும் கருத்து புலப்படுதல் அறிக.

எனவே, தனக்கு வெற்றிதரும் காலம் அறிந்து செயல்பட்டால் பின்வரும் பயன்கள் அல்லது நன்மைகள் விளையும்.

1. செல்வம் எப்போதும் நீங்காது
2. எல்லாம் எளிதில் முடியும்
3. கைகூடாதனவும் கைகூடும்

செல்வம் நிலையாத ஒன்று. மேடும் மடுவும் போல் கைமாறும் தன்மையது. ஆனால் அத்தகைய செல்வத்தையும் நிலையாகப் (எப்போதும்) பெற்று மகிழலாம். எப்போது? காலம் தப்பாமல் காரியம் செய்தால், அதாவது, ஓர் அரசு காலத்தோடு பொருந்திச் செயல்படுமாயின், ஓரிடத்திலும் நில்லாது உருண்டு ஓடிவிடும் தன்மைத்தாகிய பொருளும் நீங்காமல், அரசிடமே தங்கும் என்பதாம். செய்யத் தொடங்கிய காரியம் தவறாமல் பயன்பட்டு வருமாதலால், அதனால் வரும் பொருளும் எஞ்ஞான்றும் நீங்காது.

இனி, ஒரு செயலை அல்லது போரினை முடித்தற்கு ஏற்புடைய சாதனங்களுடன் (கருவிகள்) செயல்படுவதற்குரிய காலத்தையும், கருதிச் செய்தால், ஓர் அரசுக்குச் செய்யமுடியாத அரிய வினைகளும் உளவோ? இல்லை என்பதாம். அறிவு, ஆண்மை, பெருமை (செல்வம்) ஆகிய மூவகை ஆற்றலும், சாம, பேத, தான, தண்டம் ஆகிய நால்வகை உபாயங்களும் ஆகிய கருவிகளால் காலம் அறிந்து செயல்பட்டால் வெற்றி உறுதி என்பது அறிக.

அன்றியும், காலம் அறிந்து செயல்பட்டால் உலகத்தையே தன்வசமாக்கவும் முடியும். அதாவது, ஒருவன் உலகம் முழுமையையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வந்து ஆள எண்ணினாலும், காலம் கருதி இடத்தால் செயல்படின், அதுவும் கைகூடும். கூடாதது ஏதும் இல்லை என உறுதிப்படுத்துகிறது திருக்குறள்.

இனிக் காலம் வாய்க்கும் வரை செய்ய வேண்டுவன பின்வருமாறு:

1. காலம் வரும்வரை பொறுமையாக இருத்தல்
2. பொறுமை வெற்றிக்கு வழி
3. பகைமையை வெளிக்காட்டாதிருத்தல்

பகையை வெல்ல நினைக்கும் ஒரு நாட்டின் தலைவன் (அரசன்) தனக்குப் பகைவனைவிட வலிமை அதிகம்

இருப்பினும் உடனே மேற்சென்று பொருதாது, காலம் நோக்கிப் பொறுமையாக இருத்தல் நன்று என்பார் திருவள்ளுவர். பொறுத்திருத்தல் என்பது, நட்பாக்கல், பகையாக்கல், மேற்செல்லல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்னும் அறுவகைக் குணங்களுள் மேற்செலவிற்கு மாறாயது என்று பரிமேலழகர் உரைவிளக்கம் செய்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

1. நட்பாக்கல் - சிலரைத் தன் நண்பர்கள் ஆக்குதல்
2. பகையாக்கல் - சிலரைப் பகைவராக்குதல் (உட்பகை களைதல்)
3. மேற்சேறல் - பகைவர் மீது படையெடுத்தல்
4. இருத்தல் - காத்திருத்தல் (காலம்நோக்கி)
5. பிரித்தல் - பகைவனின் துணைவர் சிலரைப் பிரித்தல்
6. கூட்டல் - தன்னைவிட்டுச் சென்றவருள் சிலரைச் சேர்த்தல்

மேற்கூறிய ஆறு உத்திகளுள் முதலிரண்டும் ஒன்றற்கொன்று மாறுபட்டவை. அவ்வாறே பின்வரும் நான்கும் இரண்டிரண்டாக மாறுபட்டவை. ஆறு உத்திகளுள் காலம் வாய்க்கும்வரை காத்திருத்தலாகிய இருத்தல் பண்பு வெற்றிக்கு ஏதுவாக முடியும் என்பதாம். "காலம் அல்லது கண்ணும் உண்டோ?" என்ற கம்பர் வாக்கும் ஒப்புநோக்கத்தகும்.

இனி, காலம் எதிர்நோக்கிக் காரியம் மேற்கொள்ளக் காத்துப் பொறுத்திருத்தல், உரிய நேரத்தில் பகைவரைக் கடுமையாகத் தாக்குவதற்கேயாம். வலிமை மிக்க நாட்டுத் தலைவன் படையெடுத்துச் செல்லாது காலம் பார்த்து இருக்கின்ற இருப்பு, போரிடக் காத்திருக்கும் ஆட்டுக்கடா ஒன்று, தனக்குப் பகையாக இருக்கும் மற்றொன்று அழியும்படி ஓங்கிப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால்களை வாங்கித் தாக்குவதற்கு ஒப்பாகும். இறுதி வெற்றி உறுதி என்பது இதனால் பெறப்படும்.

அறிவுமிக்க ஆட்சித்தலைவன், தன் பகைவன் தீங்கு செய்த உடனேயே, அவன் அறிந்து கொள்ளுமாறு, வெளியில் தன் கோபத்தைக் காட்டான். காட்டல்கூடாது. மாறாகத் தான்

அப்பகைவனை வெல்வதற்கு ஏற்ற காலம் பார்த்து, அது வாய்க்கும்வரை, தன் மனத்திற்குள்ளேயே கோபத்தை அடக்கி வைத்திருப்பர். கோபம் புறத்தே புலப்படாமல் அகத்தே ஒளித்திருப்பர். வெளிப்படையாகப் பகைமையைக் காட்டிவிட்டால், எதிரி எச்சரிக்கையாகிவிடுவான். கோபத்தை முற்றிலும் நீக்காமல் உள்ளத்தின் உள்ளேயே மாறாமல் வைத்திருப்பர். காரணம், உட்கோபம் இல்லாவிட்டால், பகைவன் மேலும் மேலும் தன்னைக் கோழை என நினைத்துத் தனக்குத் தீங்கு செய்வதை நிறுத்தமாட்டான். ஆகவே உட்கோபம் வேண்டும் என்பார் திருவள்ளுவர்.

மேலும் தன் பகைவர்க்குக் கேடுகாலம் (முடிவுகாலம்) வரும்வரை, அவர்களைக் கண்டால் பணிந்து செல்ல வேண்டும். பகைவர் அழியும் வாய்ப்புக் கிட்டிய அக்கணமே, அவர்களை அடியோடு ஒழித்து விடல்வேண்டும். அஃதாவது, காலம் வாய்த்தவுடன் விரைந்து செயல்படவேண்டும். காலம் கடத்தல் வெற்றியைக் குலைத்துவிடும்.

உரிய சமயம் வாய்க்காதபோது கொக்கு இருக்குமாறு போல இருக்கவும், காலம் வாய்த்தபோது, அது மீனைக் கொத்துமாறு போல் தப்பாமல் செய்து முடிக்கவேண்டும். ஓடும் மீன் ஓட. உறுமீன் (பெரிய மீன்) வருமளவும் கொக்கு வாடியிருக்கும். உரிய பெரிய இரைமீன் வரும்போது, வேகமாகப் பாய்ந்து தப்பாமல் இரை கொள்ளும். அதுபோலவே, பகைவனுக்குச் சாதகமில்லாத காலத்தில், விரைந்து தாக்கி வென்றுவிடல் வேண்டும்.

*கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்*
*குத்தொக்க சீர்த்த இடத்து*

என்னும் குறள் மனம் கொள்ளத்தகும் (கூம்பும் பருவம் - வாய்க்காத காலம், சீர்த்த-வாய்த்த)

பகைவர் மீது படையெடுத்துச் செல்லும் ஓர் அரசன் அல்லது நாட்டின் ஆட்சித்தலைவன் தன் வலிமையும் காலமும் அறிந்து செயல்பட முற்படும்போது தான் செல்லவேண்டிய இடம் அல்லது நிலத்தின் தன்மையையும் அறிந்து கொள்ளல் வேண்டும். வலிமை, *காலம்,* இடம் இம்மூன்றும் *சாதமாக* அமைந்தாலே போரில் இறங்குதல் வேண்டும். அதுவே அறிவுடைமையாகும். இடம் அறிதல் என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் பின்வரும் செய்திகளை அறிவுறுத்தியுள்ளார்.

1. பகைவரது அரணை முற்றுகையிடும்போது மேற்கொள்ள வேண்டியவை
2. போர்க்களத்தின் தன்மையை அறிந்து கொள்ளல்
3. எதிர்க்கும் இடமும் எதிர்க்கத்தகாத இடமும்

பழங்காலத்தில் ஒரு நாட்டுக்குரிய அரண் பெரும்பாலும் கோட்டை, கொத்தளங்களும் அகழிகளும் ஆகும். இக்காலத்தில் மலைகள், கடல்கள் முதலியன ஒரு நாட்டின் இயற்கை அரண்களாகக் கருதப்படுகின்றன. பொதுவாக, அரண் என்பது இன்று பாதுகாப்பு எனப் பொருள்படும். புறப்பகையைத் தடுக்கத் தேவைப்படும் *முப்படைப் பாதுகாப்புக்களே* இக்காலத்தில் பெரும்பாலும் கவனிக்கப்படவேண்டியவை. இரண்டு அரசுகள் மோதிக்கொள்ளும் நிலை ஏற்பட்டால், மோதும் இடம் பற்றிய அறிவு ( Knowledge of the battle - field) மிகவும் தேவையாகும்.

ஒருநாடு மற்றொரு நாட்டுடன் போரிடும் சூழல் ஏற்படின், அவை எங்குப் போர் தொடங்கினால் (நாட்டின் எம்முனையில்) *சாதக பாதகங்கள் ஏற்படும் என்பதனை முன்கூட்டி* அறிந்து கொள்ள வேண்டும். படைவீரர்களுக்குப் போரிடும் வாய்ப்பும் வெற்றியும் எவ்விடத்தில் எளிதாகும் என்னும் போர்க்கள அறிவு மிகவும் தேவை.

பகைவர்களை வளைத்துக் கொள்வதற்கு உரிய இடம் அமைந்த பின்னரே (தேர்ந்தெடுத்தபின்) அவர்கள் மீது போர்

தொடுக்க வேண்டும். பகைவர்களை எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிடுதல் தவறாகும். வாசல்களாலும், அந்தரங்க வழி (சுரங்க வழி) களாலும் பகைவர்கள் நுழையவோ வெளியேறவோ முடியாத வகையில் கோட்டை கொத்தளங்களைச் சூழ்ந்து முற்றுகை ( Siege) இடம் வேண்டும். அன்றியும், தம் படைகள் பலரும் நெருக்குதலின்றி வாய்ப்பாகத் தங்குதற்கும், போரிடுதற்கும், படைத்தளபதிகள் தங்குதற்கும் ஏற்ற இடமகன்ற போர்க்களமாக இருத்தல் வேண்டும். இவையெல்லாம் இடனறிதலுள் அடங்கும். வீரர்களுக்கு உணவு, தண்ணீர் முதலியன கொண்டு செல்லுதற்கு ஏற்ற இடமாகவும் அமைதல் வேண்டும். இத்தகைய வசதி வாய்ப்புக்கள் கிடைப்பின் போர் தொடங்குதலும் பகைவர்களை எள்ளுதலும் செய்யலாம்.

வலிமைகள் (ஆற்றல்கள்) பலவற்றைப் பெற்றிருப்பினும், படையெடுத்துச் செல்லும் அரசனுக்கு (நாடு ஆளும் தலைவன்) அரண் சேர்ந்த ஆக்கம் பல நன்மைகளைத் தரும். பிறநாடுகள் பலவும் தனக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று கருதும் வலிமை மிக்க நாட்டின் தலைவன் கூடத் தான் போருக்குத் தேர்ந்துள்ள இடத்தின் சாதகத்தையும் துணைக் கொள்ளல் வேண்டும். அஃதாவது, தமது வலிமையினும் இடம் இன்றியமையாதது என்பது விளங்கும்.

தான் போர் செய்தற்கு ஏற்ற இடத்தினை அறிந்து செயல்படும் ஒரு நாட்டின் தலைவன், தன்னை வென்றுவிடலாம் என எண்ணியிருந்த பகைவர் தமது கருத்தை மாற்றிக் கொள்வர்.

*"எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து*
*துன்னியார் துன்னிச் செயின்"*

என்னும் குறட்பா நினைவுகூரத்தகும். (துன்னியார் போர்குறித்துச் செல்லும் தலைவர்)

இனி, பகைவரை வெல்லும் இடமும், வெல்ல இயலாத இடமும் பற்றிப் பேசுகிறார் திருவள்ளுவர்; உலகறிந்த எளிய எடுத்துக்காட்டுகளால் விளக்குகிறார்.

முதலையானது ஆழம் மிக்க நீர்நிலையில் (குளம்) பிற உயிரினங்கள் எல்லாவற்றையும் எளிதில் வென்றுவிடும்; வசப்படுத்திவிடும். அந்த ஆழமான நீர்நிலையை விட்டு வெளியில் வந்தால் பிற எல்லாம் முதலையை எளிதில் வென்றுவிடும். ஆகவே, முதலைக்கு வலிமை சேர்ப்பது நீர்நிலை; தான் வாழும் இடம். இடம் தவறி இருந்தால் பிறவற்றால் துன்புறும். இதனால் எல்லோரும் தத்தம் இடத்தில் வலிமையுடையவராவர் என்பது விளங்கும். போர்மேல் செல்லும் அரசர் (ஆட்சியாளர்) தம் பகைவர் நிலைகொள்ள முடியாத இடம் தெரிந்து சென்றால், பகைவர் மிகவும் எளியவராகித் தோல்வியுறுவர். அவ்வாறன்றித் தாம் நிற்க இயலாத இடத்திற்குச் சென்றால், பகைவர்க்கு அவர்கள் எளியவராவார்கள். இவ்வுவமை சிந்திக்கத்தக்கது.

மற்றுமோர் எடுத்துக்காட்டு: தரையில் விரைந்து ஓடும் வலிய சக்கரங்களை உடைய தேர்கள் கடலில் ஓடமுடியாது. கடலில் எளிதாகச் செல்லும் கப்பல்கள் தரையில் ஓடமாட்டா. இது யாவரும் அறிந்த ஒன்று. இவ்வுவமை வாயிலாக ஓர் அரிய கருத்தை விளக்குகிறார் திருவள்ளுவர். எல்லோரும் தத்தம் இடத்தில் வலியராவர் என்னும் கருத்து மேலும் இதனால் வலிமை பெறுகிறது. பகை வெல்லக்கருதும் அரசர் (ஆட்சியாளர்) போர் குறித்த அனைத்து உத்திகளையும் அறிந்து பொருதுவார்களேயானால், பகைவெல்வதற்கு வேறு துணை எதுவும் வேண்டா. மனத்திண்மை ஆகிய அஞ்சாமை ஒன்றே போதும். இடனறிந்து செயல்மேற்கொள்ளல் அஞ்சாமையால் விளைவதாகும்.

இனி, இடம் தவறிப் போர்மேல் சென்றால் வரும் தீமைகளும் இழுக்கும் விவரிக்கப்படுகின்றன. ஓர் அரசன் தனது படையின் பெருக்கத்தையும் வலிமையையும் கருத்திற்கொண்டு இடம் நோக்காது செல்வானாயின், தன் படை வீரர் பலரும் ஒருங்கிணைந்து செயல்பட முடியாமையாலோ, பயிற்சி இன்மையாலோ, பயனின்றித் தான் அழிந்துபடுவான் என்பது ஒருதலை. இடம் வாய்க்காமையால் சிறுபடைக்கும் தோற்பான் என்பது கருத்து.

தன் பகைவர் அரணை முற்றுகை இடும் ஆற்றல் இலராயினும், அவர்களிடத்தில் சென்று அவர்களைத் தாக்குதல் வெற்றியைத் தாராது, அவரிடத்தில் அவர் வலிமை பெற்றவராவர். ஆண்மையும், ஆற்றலும் படைப்பெருக்கமும் உடைய அரசராயினும் தமக்குச் சாதகமில்லாத இடத்திற் செல்லின், அவற்றால் ஒருபயனும் இன்றி மிகவும் எளியவர்களாலும் அழிவர். இதனை ஓர் உவமையால் விளக்குவார் திருவள்ளுவர்.

பாகனுக்கு அடங்காமலும், பகைவர்தம் வேற்படைகளை முகத்திலே தாங்கியும் போர் புரியத்தக்க ஆண்யானை சேற்று நிலத்தில் அகப்படுமாயின், அதனை எளிய நரியும் வென்றுவிடும். கொன்றுவிடும். இதனால் இடம் நோக்காது தம் வலிமை ஒன்றையே கருதிப் போர் மேற்செல்லும் அரசர் தோல்வியுறுவர் என்பது விளங்கும்.

*ஒரு விளக்கம்*

வலியறிதல், காலமறிதல், இடனறிதல் என்ற மூன்று அதிகாரங்களில் திருவள்ளுவர் கூறியுள்ள செய்திகள் பெரும்பாலும் போர் நிகழும்போது அல்லது அத்தகைய சூழ்நிலை ஏற்படும்போது, போர் மேல் செல்லும் அரசர் (ஆட்சியாளர்) கடைப்பிடிக்கவேண்டிய முக்கியமான ஆலோசனைகளையும் போர் உத்திகளையும் பற்றியவை ஆகும். இதனை மறத்தல் கூடாது. அதே வேளையில் இவை யாவும் சமுதாயத்தில் வாழும் மக்களுக்கும் ஏற்றவாறு பொருந்தும். பொதுவாக மக்களுக்கும் சிறப்பாக ஆட்சியாளர்களுக்கும் கூறப்பட்டவை இவை என்பது முன்னரே விளக்கப்பட்டுள்ளது. இம்மூன்று அதிகாரங்களிலும் வரும் பின்வரும் குறட்பாக்கள் நினைவில் கொள்ளத்தக்கவை

## *வலியறிதல்*

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்"

## *காலமறிதல்*

"காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்"

## *இடனறிதல்*

"கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து"

(தொடரும்....)

# பழமொழிகளில் பாலின வெளிப்பாடுகள்

*முனைவர் வீ. ரேணுகாதேவி*

மொழி சமுதாயம் சார்ந்தது. சமுதாயம் மொழியைச் சார்ந்தது. எனவே மொழியானது அது சார்ந்துள்ள சமுதாயத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் கண்ணாடி என்று மொழியியலார் கூறுவர். இன்னும் குறிப்பிட்டு விளக்கும் நிலையில் மொழியானது மனித நாகரிகத்தோடும், சமுதாய உணர்வுகளோடும் பின்னிப்பிணைந்து இயங்கி வருகிறது என்றும் குறிப்பிடப்படுகின்றது. மனிதனின் எண்ணங்கள், ஆசைகள், சிந்தனைகளைப் பல்வேறு வகைகளில் ஏற்றவாறு வெளிப்படுத்தும் ஒப்பற்ற ஒரு கருவியாக விளங்கி வருவதும் மொழியாகும்.

ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை, நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம்பிடித்துக் காட்டுவதே நாட்டுப்புறவியலாகும். மண்ணின் மைந்தர்தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உலாவரும் இலக்கியங்கள் என்பார் சு.சக்திவேல் (1992:III). ஒரு நாட்டின் வாழ்வையும், வரலாற்றையும், குறையையும், நிறையையும், மக்களின் பண்பாட்டையும் பழக்க வழக்கங்கள் எண்ணங்கள் ஆகியவற்றையும் வெளிப்படையாகக் காட்டும் கண்ணாடியாகும் நாட்டுப்புற இலக்கியங்கள். இந்நாட்டுப்புற இலக்கிய வகைகளில் ஒன்றுதான் பழமொழிகள். இப்பழமொழிகள் மனிதச் சிந்தனையின் அனுபவ ஆக்கங்கள் என்கிறார் தி.நடராசன் (1996 : VI).

ஜெர்மன் நாட்டுப் பேரறிஞர் செல்வந்தே "வாழ்க்கை அனுபவ அடிப்படையில் எழுந்த குறுகிய அமைப்புடையது பழமொழி என்கிறார் (Quoted in நாட்டுப்புற இயல் ஆய்வு 1992:99) மேற்கூறப்பட்டவற்றிலிருந்து அறியப்படுவது பழமொழிகள் வாழ்வியல் கருத்துக்களையும், சமுதாயம் பற்றிய சிந்தனைகளையும் வெளிப்படுத்தப் பயன்படும் கருவியாக

அமைகின்றது எனத் தெரிகின்றது. இத்தகு பழமொழிகளைத் தரவுகளாகக் கொண்டு பழமொழிகளில் பாலின வெளிப்பாடுகள் என்னும் இக்கட்டுரை இச்சமுதாயத்தில் ஆண், பெண் நிலைபற்றிய நிலைப்பாடு எவ்வாறு அமைந்துள்ளது என ஆராய முற்படுகிறது.

தந்தைவழிச் சமூகக் கருத்தியல் உருவாவதற்கு முற்பட்ட காலத்தில் பெண்கள் ஆண்களைவிட உயர் நிலையில் வைத்துப் போற்றப்பட்டனர் என்பது பின்வரும் பழமொழிகளால் அறியப்படுகின்றது.

1. அவளே குடும்பவிளக்கு
   அவளே குலதெய்வம்
2. ஏர் பிடித்தவன் என்ன செய்வான்
   பானை பிடித்தவள் பாக்கியம்
3. மனிதன் ஆரம்பமாவது பெண்ணாலே
   அடங்கி ஒடுங்குவதும் பெண்ணாலே
4. வாழ்கிற வீட்டுக்கு ஒரு பெண்ணும்
   வைக்கோற் போருக்கு ஒரு கன்றும்
5. அவள் சொல்தான் அவனுக்கு தெய்வ வாக்கு

தாய்வழிச் சமுதாயத்தில் பெண்கள் போற்றப்பட்டாலும் ஆண்கள் இழிவுபடுத்தப்படவில்லை. ஆனால் தாய்வழிச் சமுதாயம் தந்தை வழிச்சமுதாயமாக மாறிய கால கட்டத்தில் பெண்கள் பல வழிகளிலும் இழிவுபடுத்தப்படுகின்றனர்.

அவர்கள் வேசி, தாசி, நீலி, கள்ளி, தாலியறுத்தவள், கைம் பெண்டாட்டி, அடங்காத பிடாரி போன்ற இழி சொற்களால் குறிக்கப்படுகின்றனர்.

6. கள்ளிக்குத் தண்ணீர் கண்ணிலே
   நீலிக்குத் தண்ணீர் இமையிலே
7. வேசி ஆடினால் காசு
   வெள்ளாட்டி ஆடினால் சவுக்கு
8. தரித்திரம் பிடித்தவள் தலை முழுகப்போக
   ஏகாதசி வந்துதாம்

இவை மட்டுமின்றிப் பெண்களின் கற்பு நெறியும் இழிவு படுத்தப்படுகின்றது.

9. மகாராஜன் பெண்ஜாதி மர்மக்காரி
யாருடன் போனாலும் திறமைக்காரி
10. சமர்த்தன் பெண்ஜாதியும் சோரம் போவாள்
11. தாலியறுத்தவளுக்கு மருத்துவச்சி ஏன்?
12. பிடித்தவர்க் கெல்லாம் பெண்டாவாள்
13. குருடன் பெண்டாட்டி கூனனுடன் உறவாடினாள்.

தாய்வழிச் சமுதாயத்தில் ஆண், பெண் மக்களுக்குப் பரிசுப்பணம் கொடுத்து அல்லது வீரச்செயல்களை நிகழ்த்தித் தான் மணம் செய்யும் நிலை இருந்து வந்திருக்க வேண்டும் என்பதை,

அத்தை மகளானாலும் சும்மா கிடைப்பாளா? என்னும் பழமொழியால் காணலாம். அது மட்டுமல்லாமல் பெண்கள் மிகவும் போற்றப்பட்டனர் என்பது,

14. ஆணை அடித்துவளர் பெண்ணைப் போற்றிவளர்
15. ஆணுக்குக் கேடு செய்தாலும் பெண்ணுக்குப் பிழை செய்தல் ஆகாது.

என்னும் பழமொழிகளால் அறியலாம்.

தாய்வழிச் சமுதாயம் பின்னர் தந்தைவழிச் சமுதாயமாக உருப்பெற்ற காலகட்டத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்டது.

16. ஆசைக்கொரு பெண்ணும்
ஆஸ்திக்கொரு ஆணும்
17. அடுக்களைக்கு ஒரு பெண்ணும்
அம்பலத்திற்கு ஒரு ஆணும்

மேற்காட்டப்பட்ட பழமொழிகள் ஆண் என்பவன் தந்தைக்குப் பின் அவருக்கு வாரிசாக அவருடைய சொத்துக்களை ஆளவும், பாரம்பரிய அதிகாரங்களுக்கு உரியவனாகவும் இருப்பான் என்பதைக் காட்டுகின்றன.

சொத்துரிமை பெண்களுக்கு மறுக்கப்பட்டதன் விளைவாக இன்றளவிலும் சமுதாயத்தில் புரையோடிப்போன புண்ணாக விளங்கி வருவது வரதட்சணை ஆகும்.

18. ஆடிக்கு அழைக்காத மாமியாரைத்
    தேடிப்பிடிச்சு செருப்பாலடி
19. செல்வப் பெண் சீரங்க நாயகிக்குச்
    சீதனம் வந்ததாம் வரையோடு
20. ஆடு வரும் பின்னே(த்லை) ஆடி வரும் முன்னே
21. பொன் வைக்கற எடத்திலே பூவையாவது வைக்கணும்

மேற்காட்டப்பட்டுள்ள பழமொழிகள் வரதட்சணை என்ற பெயரில் மாப்பிள்ளை வீட்டாரால் பெண் வீட்டாரிடமிருந்து பொருளாகவும் பொன்னாகவும், பணமாகவும் வாங்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்துகின்றன.

வரதட்சணை வழங்கும் வழக்கமே இன்று உலகளவில் பேசப்படும் பெண்சிசுக் கொலைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. இவ்வரதட்சணைக் கொடுமையை வெளிப்படுத்தும் முகமாக அமைந்த பழமொழிகள்தான்,

22. அஞ்சு பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்.
23. நாலுபுள்ள பெத்தா நாதங்கியுமிருக்காது
24. கைம்பெண்டாட்டி பெற்ற பெண்ணானாலும் செய்யும்
    சடங்கைச் சீராய் செய்ய வேண்டும்.
25. ஆறாம் குழந்தை பெண்ணாகப் பிறந்தால் ஆளான
    குடித்தனமும் நீறாய்விடும்.

பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்ட ஆணாதிக்கச் சமுதாயத்தில், பெண்ணுக்கு அதிகமான அளவில் வரதட்சணை கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அச்சூழலின் காரணமாகப் பாதிக்கப்பட்டவன் ஆணே. தந்தையும் தந்தைக்குப்பின் தனயனும் பெண்களுக்குப் பண்டிகைகளுக்கும் சடங்குகளுக்கும் சீர் கொடுக்கவேண்டிய கட்டாயச் சூழலின் காரணமாக மனம் வெறுத்துப் போகும் ஆண் தனக்குப் பெண்மக்களே வேண்டாம் என்னும் மனநிலைக்குத் தள்ளப்படுகிறான். எனவே அஞ்சு பெண் என்ன ஒரு பெண்கூட வேண்டாம் என நினைக்கும்

சூழல் ஏற்படுகிறது. அதுவே பெண்சிசுக் கொலைக்குக் காரணமாகவும் அமைகின்றது. தான் பெற்ற பிள்ளையைப் பெற்ற தாயைக் கொண்டே கொல்லச் செய்யும் கொடுமையைச் சமூகம் பெண்கள் மேல் திணிக்கிறது.

வரதட்சணை சரிவரக் கிடைக்கப்பெறாத பெண்கள் தங்களுக்குரிய பங்கினைப் பெறுவதற்குப் பல வழிகளிலும் முயலுவர் என்பதை,

26. அக்காளும் மச்சானும் ஒண்ணானா
மக்க வாயிலே மண்ணு.
27. கட்டி அழுகையிலே உனக்குப்
பெட்டியிலே கை என்ன?
என்னும் பழமொழிகள் விளக்குகின்றன.

ஆணுக்குப் பெண் அடங்கியே இருந்தாள் என்பதும், ஆண் ஆதிக்க சமூகமே இருந்தது என்பதும், பெண் சார்பு நிலையிலும் இரண்டாந்தர நிலையிலுமே இருக்கிறாள் என்பதும்,

28. கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருசன்
29. ஆணாய்ப் பிறந்தால் அருமை
பெண்ணாய் பிறந்தால் எருமை
30. அடித்தாலும் புருஷன்
அணைத்தாலும் புருஷன்
31. போட்ட கோட்டைத் தாண்ட மாட்டாள்
என்னும் பழமொழிகளால் அறிய முடிகின்றது. பெண் தன்னைச் சார்ந்து வாழும், இரண்டாந்தர நிலையில் நடத்தும் சூழலை அவனுக்குக் கற்றுத்தருகிறது. இவற்றின் விளைவு அவளும் தன்னுடைமை என்ற எண்ணத்தை வளர்க்கின்றது. அடிப்படையில் இந்த மனநிலையும் சமூக அமைப்பும் ஆணாதிக்கப் போக்கும் மாறாத நிலையில் மணவாழ்வில் சிக்கல் உருவாகிறது. அதற்கு வரதட்சணை துணையாகிறது. கவரன் அவளோடு கூடினால் அவளுக்கு மதிப்பு உண்டாகிறது.

இல்லையேல் எந்த இலக்கும் இல்லாத பூஜ்யமாகவே மதிப்பிழந்து நிற்கிறாள்.

ஆணுக்குச் சிறு வயது முதலே உடைமை மனோபாவமும் ஆண் சொத்துக்குரியவன், மேலானவன் என்ற ஆதிக்க உணர்வும் போதிக்கப்படுகின்றது என்பதை,

32. அடுக்களைக்கு ஒரு பெண்ணும்
அம்பலத்திற்கு ஒரு ஆணும்

33. ஆசைக்கொரு பெண்ணும்
ஆஸ்திக்கொரு ஆணும்

34. சாண் பிள்ளையானாலும்
ஆண்பிள்ளை இருக்க வேண்டும்.

என்னும் பழமொழிகள் விளக்குகின்றன.

சமூக மதிப்புக்கள் எந்த ஒரு பெண்ணுக்கும் ஆணைச் சார்ந்தே வந்து அடைகிறது. இந்த நியதியை ஒரு பெண் தனி மனித நிலையில் நின்று உடைக்க முடியவில்லை. எனவே பெண்கள் எத்தனை கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டாலும் அவள் கணவனைச் சார்ந்து கணவன் வீட்டிலே இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறாள் என்பதற்குக் கீழ்க்காணும் பழமொழிகள் சான்றாக அமைகின்றன.

35. வாழாத பெண்ணுக்கு மை ஏண்டி
பொட்டு ஏண்டி, மஞ்சள் குளிப்பு ஏண்டி

36. வாழாப் பெண் தாயோடே

37. வாழ்கிற பெண்ணைத் தாயார் கெடுத்ததுபோல்

38. தலைவன் நிற்கத் தண்டும் நிற்கும்
தலைவன் மயங்கச் சர்வமும் மயங்கும்

39. தாய் வீடோடிய பெண்ணும்
பேயோடாடிய கூத்தும்

40. பெட்டைக் கோழி கூவியா விடியப்போகிறது.

41. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்

தனது பாதுகாப்புக்கு, அன்புக்கு ஊறு ஏற்படும் நிலையில் மனிதனுக்கு ஆக்கிரமிக்கும் மனப்பான்மை ஏற்பட்டுவிடுகிறது. தாய்வழிச் சமுதாயத்தில் ஆண்களைவிட உயர் நிலையில் நிகழ்வுகளை நிகழ்த்திக் கொண்டிருந்த பெண்கள் தந்தை வழிச்

சமுதாயத்தில் இரண்டாம் பாலினமாக அன்புக்கும் அதிகாரத்திற்கும் ஏங்குபவளாகவும் இருக்கிறாள். அதுவே பெண்களுக்கிடையே சண்டைசச்சரவுகளும் காழ்ப்பு மனப்பான்மையும் தோன்றக் காரணமாகின்றது. இதற்கு ஆதாரமாகப் பின்வரும் பழமொழிகள் அமைகின்றன.

42. பெண்டுகள் இருந்த இடம்
சண்டைகள் பெருத்த இடம்
43. மகன் செத்தாலும் சாகட்டும்
மருமகள் கொட்டம் அடங்கினால் போதும்
44. கரிசனப்பட்ட மாமியார்
மருமகளைப் பார்த்து ஏக்கமுற்றாளாம்
45. மருமகள் வந்தா மாமியாருக்குக் கேடு
எருமெ வந்தா எருதுக்குக் கேடு
46. மருமகொ அறுக்கோணும்னு மகனை கொன்னாப்பலே
47. மாமியார் ஒடெச்சா மண்சட்டி
மருமக ஒடெச்சா பொன்கொடம்
48. மாமியார் மெச்சின மருமகளில்லே
மருமக மெச்சின மாமியாரில்லே
49. மாமியார் பண்றது மந்திரம்
மருமகள் பண்றது தந்திரம்
50. ஆண்பிள்ளை ஆயிரம் பேர் ஆனாலும் ஒத்திருப்பர்
பெண்பிள்ளைகள் அக்கா தங்கச்சி ஆனாலும்
ஒத்திரார்கள்

பெண் ஆணின் நுகர்வுப் பொருளாகக் கருதப்பட்டாள் என்பதைப் பின்வரும் பழமொழிகள் காட்டுகின்றன.

51. ஆளனில்லாத மங்கைக்கு அழகுபாழ்
52. ஆளனில்லாத துக்கம் அழுதாலும் தீராது.
53. ஆறுநேரான ஊரும்
அரசனோடெதிர்த்த குடியும்
புருஷனோடு ஏறுமாறான பெண்டிரும்
நீறு நீறாகிவிடும்.
54. பெண்கள் சமர்த்து சமையற் கட்டிலிலும்
படுக்கைக் கட்டிலிலும் தான்.

கைம் பெண்ணும் கற்புநெறி பிறழாதவளாக மறுமணம் மறுக்கப்பட்டவளாகவே இச்சமுதாயத்தில் வாழக் கடமைப்பட்டவள் என்பதை,

55. அறுத்தவள் ஆண்பிள்ளை பெற்ற கதைபோல

56. அகமுடையான் செத்தவளுக்கு மருத்துவச்சி

என்னும் பழமொழிகள் காட்டுகின்றன.

அவனுக்கென்ன ஆண்பிள்ளை என்று ஆணுடைய குறைகளையும் கொண்டாடும் சமுதாயம் பெண்ணின் இருண்ட பரிமாணங்களை வெளிச்சமிட்டுக் காட்டுவதற்குத் தயங்குவதில்லை என்பதைப் பின்வரும் பழமொழிகள் வெளிப்படுத்துகின்றன.

57. அரசனை நம்பி புருஷனை கைவுட்டகதை

58. அரசனைக் கண்ட கண்ணுக்குப் புருஷனைக் கண்டால் கொசுவைப் போலிருக்கும்.

59. மாற்றானை நம்பினாலும்
மாதரை நம்ப வொண்ணாது.

60. கோடிதனம் இருந்தாலும்
குணம் இல்லாத மங்கையரைக் கூடாதே

61. கள்ளிக்குத் தண்ணீர் கண்ணிலே
நிலீக்குத் தண்ணீர் இமையிலே

சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை என்று ஆணின் வலிமையைப் போற்றும் இச்சமுதாயம்

62. எட்டுப் பெண்கள் சேர்ந்தாலும் ஒரு பெட்டைக் கோழி கூட அடிக்கமாட்டாள் என்று பெண்ணின் இயலாமையை எள்ளுகின்றது.

ஆண் பல மகளிரிடம் தொடர்பு கொள்வதும் மனைவி இறந்தால் உடன் மறுமணம் செய்துகொள்வதும் ஆணுக்கு கௌரவம் என்று கருதப்பட்டது என்பதை,

63. பெண்ஜாதி இறந்தால் புதுமாப்பிள்ளை

64. மனைவி இறந்தால் மணம், மகள் இறந்தால் பிணம்

65. ஒரு பொண்டாட்டிக்காரனுக்கு உறியிலே சோறு
இரு பொண்டாட்டிக் காரனுக்கு இடியுஞ்சோறு

66. கிளிபோல ஒரு பொண்டாட்டி இருந்தாலும்

கொரங்கு போல ஒரு வெப்பாட்டி வேணும்.

67. ஆயிரம் பேரிடத்தில் சினேகம் பண்ணினாலும்
ஆண்பிள்ளைகளுக்கென்ன?

68. ஏதும் அற்றவனுக்கு
இரண்டு பெண்டாட்டி ஏன்?

என இப்பழமொழிகள் காட்டுகின்றன, பெண் எனப்படுபவள் அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு போன்ற குணங்களைக் கொண்டவராக இருக்கவேண்டும் என இச்சமுதாயம் கருதுகின்றது என்பதைப் பின்வரும் பழமொழிகள் வெளிப்படுத்துகின்றன.

69. அடக்கமே பெண்ணுக்கு அழகு

70. அடக்கமுடைய பெண்ணுக்கு அழகு ஏன்?

71. அடங்காப்பிடாரியை பெண்டாக்கிக் கொண்டது போல

72. அடங்காத பெண்சாதியால் அத்தைக்கும் நமக்கும்
பொல்லாப்பு.

73. வெட்கமற்ற பெண்பிள்ளை வீண்

74. பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல்.

அதிகாரம் ஆண்களின் கையில் இருந்த காரணத்தினால் பெண் குழந்தைகள் இருந்தாலும் ஒரு ஆண் குழந்தை தேவை என்ற நிலை இருந்ததை,

75. சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை இருக்க

76. சுவர்க்கத்திற்குப் போனாலும் கக்கத்திலே ஒரு பிள்ளை
வேண்டும்.

77. தலைச்சன் பிள்ளை பெற்றவளுக்குத் தாலாட்டு

என்னும் பழமெழிகளால் அறியலாம்.

தேவதாசிகள் முறைப்படி சமூகம் பெண்களை கடவுளுக்குத் தொண்டாற்றுவதற்காகத் தானமாக விட்டது. இப்படி விடப்பட்ட பெண்கள் மதத்தின் பெயரால் அவர்கள் அக்கோயிலின் பூசைக் காலங்கள், திருவிழாக்கள் முதலிய சமய விழாக்களில் ஆடல்பாடல்களால் இறைவனைப் பாடிப் பரவி வாழ்க்கை நடத்தினர். ஆனால் இவ்தேவதாசிப் பெண்கள் அக்கோயில் பூசாரிகள், உள்ளூர் மிட்டா மிராசுகள், அதிகார எடுபிடிகள் மற்றும் பலருக்கும் பாலியல் இன்பத்திற்குப் பயன்படும் விலை

மகளிராக மிகப்பெரிய அவல வாழ்க்கை நடத்தினர். இப்படி மதத்தின் பெயரால் பெண் சமூகம் பழியாக்கப்பட்டு ஆண்வர்க்கத்தின் இச்சையைப் பூர்த்தி செய்பவர்களாக வாழ்ந்தனர் தாசிகள். இவர்கள் வேசிகள் என்றும் இழிவு படுத்தப்படுகின்றனர் என்பது,

78. எழுத்துக்குப் பால்மாறின கணக்கனும்
    படுக்கைக்கு பால்மாறின தாசியும்
    வருத்தம் அடைவார்கள்
79. தேவடியா வீட்டு தாப்பா
    எப்ப வேணும்னாலும் தொறக்கும்
80. ஊருக்கு ஒரு தேவடியா யாருக்குன்னு ஆடுவா
81. ஊரறிஞ்ச தேவடியாளுக்கு வெக்கம் ஏன்?
82. ஊரறிஞ்ச தேவடியாளுக்கு புருஷன் தேவையா?
83. வேசி ஆடினால் காசு.
84. வேசி உறவு காசிலும் பணத்திலுந்தான்
85. வேசியைப் பெண்டாக வைத்துக் கொண்டால்
    விளக்குத்தான் பிடிக்க வேண்டும்.

என்னும் பழமொழிகளால் அறியப்படுகின்றது. மேலும் வேசி என்பவள் பணத்தாசை பிடித்தவள் என்றும் மனிதநேயம் அற்றவள், மனைவியாக வாழத்தகுதியற்றவள் என்றும் இழிவு படுத்தப்படுகிறாள்.

முடிவுரை:-

நாட்டுப்புற இலக்கியங்களை ஆராயவேண்டுமானால் அவை சொல்லப்படும் அல்லது நிகழ்த்தப்படும் சூழல் இன்றியமை யாதது என்பர். களப்பணி செய்யப்படாத நிலையில் இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ள பழமொழிகள், பழமொழிகளின் தொகுப்புகளிலிருந்து எடுத்துக்காட்டுகளாக கையாளப்பட்ட நிலையில் அவற்றின் மொழியே பிரதான ஆய்வுக்களமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் வாயிலாகச் சமுதாயத்தில் ஆண் பெண் நிலை பற்றிய பின் வரும் கருத்துக்கள் பெறப்படுகின்றன.

1. பண்டைய சமுதாயம் பெண்ணைப் போற்றும் தாய்வழிச் சமுதாயமாக இருந்தது, பெண்ணுக்குப் பரிசப்பணம் கொடுத்து

மணம் முடிக்கும் வழக்கம் பண்டைய சமுதாயத்தில் இருந்து வந்துள்ளது.

2. தாய்வழிச் சமுதாயம், தந்தைவழிச் சமுதாயமாக மாறிய காலத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்டது.
3. சொத்துரிமை மறுக்கப்பட்ட காரணத்தினால் பெண் மக்களுக்கு வரதட்சணை கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.
4. இதன் அடிப்படையில் சிற்சில சமயங்களில் பெண் குழந்தைகள் போற்றப்பட்டாலும், பெரும்பான்மையும் பெண் குழந்தைகள் பெற்றோருக்குச் சுமை என்னும் நிலை ஏற்பட்டது. கட்டாயம் ஒரு ஆண் வாரிசு வேண்டும் என்னும் மனநிலை இருந்தது. இச்சூழலே பிற்காலத்தில் பெண்சிசுச் கொலைக்கு அடிப்படையாக அமைந்தது.
5. ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண் என்பவள் ஆணின் உடைமை என்றும், அவள் ஒரு நுகர்பொருள் என்றும் ஆணுக்குக் கட்டுப்பட்டவள் என்றும் ஆண் என்பவன் சொத்துக்குரியவன், மேலானவன், ஆதிக்க உணர்வு கொண்டவன் என்றும் காட்டப்படுகின்றது.
6. பெண்ணுக்குக் கற்பு நெறியைப் போதித்து மறுமணத்தை மறுத்த சமுதாயம், ஆணுக்குப் பலதார மணம் என்பதும் அவனது தகுதி குறியீடு (Status Symbols) எனவும் மனைவி இறந்தவுடன் மறுமணம் செய்துகொள்வது அவசியம் என்றும் சமுதாயம் போதித்தது.
7. பெண் எனப்படுபவள் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் குணங்களின் இலக்கணமாகவும் இருப்பிடமாகவும் இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.
8. பெண் என்பவள் வலிமையற்றவள் எனக்கூறி அவளுடைய வலிமையை அவளே அறிய விடாமல் ஏமாற்றுகிறது.
9. ஆணின் குறைபாடுகளை அவனுடைய சிறப்புகளாகக் கருதும் சமுதாயம் பெண்ணின் இருண்ட பரிமாணங்களை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.
10. சொத்துரிமை இழந்த பெண் தனது பாதுகாப்புக்கும் அன்புக்கும் பொருளாதார உரிமைக்கும் அதிகாரத்திற்கும் (Power) போராடுபவளாகவே இருக்கிறாள்.
11. சமூக மதிப்பீடுகளில் பெண் தனித்து நிற்க இயலாதவளாக

ஆணைச்சார்ந்தே இருப்பவளாகக் காட்டப்படுகிறாள். பெண்ணை இழிவுபடுத்தும் சொற்கள் அதிகம் பயன்படுத்தப் பட்டுள்ளன. இதனால் சமுதாயத்தில் பெண்களின் இழி நிலை வெளிப்படுத்தப்படுகின்றது.

12. மேற்கூறப்பட்ட காரணங்களால் பழமொழிகளால் வெளிப்படுத்தப்படும் சமுதாயம் மரபு வழிப்பட்ட சமுதாயமே என அறியப்படுகின்றது.

**துணை நூற்பட்டியல்**


1. சக்திவேல் சு.1992 நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. துர்க்காதாஸ், சாமி, எஸ்.கே.1978 தமிழ்நாட்டுப் பழமொழிகள் வானதிபதிப்பகம், சென்னை.
3. நடராஜன் தி.வை 1996 மதிப்புரை களம் 2 நாட்டுப்புறவியல் ஆய்வுகள், நாட்டுப்புறவியல் ஆய்வாளர் மன்றம், தஞ்சாவூர்.
4. Meenakshi Sundaram 1984 Konku Proverbs; A Study M.Guhan and M. Adi, Coimbatore.

# ஒழுக்கமும் ஓர் உயர்கல்வியே

சு.கு.பன்னீர் செல்வம்

*முன்னுரை :*

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்ற வள்ளுவர் காட்டும் வைர வரிகள் இன்றைக்கு அவசியத்தேவை. கல்வி என்பது ஏட்டிலிருந்து பெற்றுக்கொள்வதோடு நிறைவு பெற்றுவிடுவதில்லை. மனிதன் பண்பட்ட வாழ்க்கைக்கு ஒழுக்கமே முதலில் வேண்டும். இதனை மாணவர்களிடம் கொடுக்க வேண்டிய பொறுப்பில் உள்ளோர் பெற்றோர்களும், ஆசிரியர்களுமே! அத்தகைய நல்லொழுக்கமிக்க ஆசிரியர்களின் தேவையை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

*புதுமை :*

பழங்காலத்தில் குருகுலங்கள் இருந்தன. குரு என்பவர் மாணவர்களின் கல்விக்கும் நடத்தைக்கும் பொறுப்பானவராக இருந்தார். மாணவனுக்குக் கல்வியுடன் அதை எப்படி உபயோகிக்க வேண்டும் என்பது குருவுக்குத் தெரிந்திருந்தது. நெறிப்படுத்துவது கல்வியின் முக்கியப் பங்காக இருந்தது. ஆனால், காலத்திற்கேற்பக் கல்விமுறை மாறிவிட்டது. தற்போதைய சூழ்நிலைகள் அவை நல்லபடியாக நடப்பதற்கு ஒரு சவாலாக உள்ளன. மக்கள்தொகைப் பெருக்கம் அனைத்து நிலைகளிலும் கல்வியின் தேவையை உருவாக்கி விட்டது. சென்ற ஆண்டு பணிபுரிந்த ஆசிரியரின் சூழ்நிலையிலிருந்து இன்று பணிபுரியும் ஆசிரியரின் சூழ்நிலை வேறாக இருக்கும். ஆசிரியர்கள் சந்திக்கும் இடர்ப்பாடுகளைப் புரிந்துகொள்ள இந்தப் பிரச்சினைகளை நாம் ஆராயவேண்டும்.

*தேவை - ஈடுபாடு, அக்கறை :*

கல்வியின் நோக்கம் அறிவிற்குப் பயிற்சி கொடுத்து அதன் மூலம் தற்போதைய சூழ்நிலையில் ஒரு மனிதன் திறமையாகச் செயல்பட உதவிட வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான திறன்களை அடையத் தேவையான சந்தர்ப்பங்களைக் கல்வி உருவாக்க வேண்டும். நூற்றுக் கணக்கான வருடங்களாக இந்தப் பொதுவான நோக்கங்கள் மாறாமலிருக்கின்றன. ஆசிரியர் சொற்பொழிவாற்றுவது அல்லது மொத்தமாகச் (பொதுவாக) சொல்லிக் கொடுப்பது என்பதே இன்றுள்ள நிலை. மாணவனின் நடத்தைபற்றிப் பெரும்பாலான ஆசிரியர்களின் கவனம் குறைவாகவே உள்ளது. தனிப்பட்ட ஈடுபாடு, ஆசிரியர்-மாணவர் உறவு இவையெல்லாம் இன்று இல்லை என்றாகிவிட்டது.

கல்விக்கு முதல் தலைமுறை மாணவர்களின் பெற்றோர்கள் கல்லாமலிருப்பதும், பெற்றோர்கள் இருவரும் வேலைக்குச் செல்லவேண்டிய நிலையிருப்பதால் குழந்தைகள் மீதான அக்கறை குறைவதாலும், நடத்தையைப் பற்றி ஆசிரியர்கள் கவலைப்படாததாலும் நிறைய மாணவர்கள் தம் சகவயதினருடனோ அல்லது திரைப்படங்களையோ உதாரணமாகக் கொள்கிறார்கள். பொருளாதாரம், தனிப்பட்ட மனிதனின் கொள்கைகளை மாற்றுவதால், கல்வியையும் இவை பாதிக்கின்றன. கல்வி இன்று வியாபாரச் சூழலுக்கு வந்துவிட்டது. இன்றைய தகவல் தொழில்நுட்பங்கள் நல்லவை என்றாலும் ஆசிரியரின் பங்கை இவை பெருமளவு குறைத்துவிட்டன. அறிவு, எளிதாகவும் அதிகமாகவும் கிடைக்கிறது. ஆனால் அது ஒழுக்கம், மனிதாபிமானம் அற்றதாக உள்ளது.

இன்றைய போதனா மொழிகூட இளைஞர் சமுதாயத்தைப் பாதிக்கிறது. ஆங்கிலேயர்கள் விட்டுச் சென்ற ஆங்கிலம், தாய்மொழிக்குரிய முதலிடத்தில் உள்ளது. ஒரு கல்லூரி ஆசிரியரோ அல்லது மாணவனோ, ஆங்கிலத்திலோ அல்லது தாய்மொழியிலோ அல்லது இரண்டிலுமோ திறமையற்றவர்களாக உள்ளனர். மொழித்திறன் குறைவு, ஆசிரியர் மற்றும் மாணவர் இருவரின் திறமைகளையும் கட்டுப்படுத்துகிறது. இதனால் பெரும்பாலான பாடங்கள் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாகப் பொருளாதாரம், சமூகவியல், அரசியல், வரலாறு போன்றவை. மொழித்திறன் இல்லாத ஒரு மாணவர் நாளை ஆசிரியரானால் அவரது மாணவர்களும் திறமை குறைவானவர்களாகவே இருப்பார்கள்.

இன்று சுயநலம், குழுஉணர்வு போன்ற பிற்போக்கு எண்ணங்கள் தலைதூக்கியுள்ளன. இன்றைய மாணவர்கள் நாளைய ஆராய்ச்சியாளராகவும், ஆசிரியராகவும் ஆவதால் அவர்கள் தங்களுடைய குழு உணர்வுகளைப் பிரதிபலிப்பதால் எதிர்காலக் கல்வியின் நோக்கம் திசைதிருப்பப்படுகிறது.

*ஆய்வு மனப்பான்மை :*

ஆராய்ச்சிகளினால் புதிய அறிவு உருவாக்கப்படுகிறது. அதனால் புதிய முன்னேற்றங்களைப் பெற ஆராய்ச்சி மனப்பான்மை முதலில் உருவாக வேண்டும். சிறந்த ஆராய்ச்சியாளர்களையும், கல்வியாளர்களையும் உருவாக்குவது பல்கலைக்கழக நிதிக்குழுவின் (UGC) முதல் நோக்கம். பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் திறமையான பல ஆசிரியர்கள் பதவி உயர்வு இல்லாது தங்களது பணியில் சோர்வுடன் காணப்பட்டனர். தகுதியின் அடிப்படையில் ஊதிய உயர்வு என்று முதலில் அறிமுகப்படுத்திய UGC, பிறகு திறமையான ஆசிரியர்களின் வாய்ப்புக்காகத் தொழில்

முன்னேற்றத்தையும் கொண்டுவந்தது. எந்த நோக்கத்திற்காக அந்தத்திட்டம் கொண்டு வரப்பட்டதோ அது சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை என்பதை UGC உணர்ந்தது. டாக்டர் பட்டம் அல்லது சில வருட அனுபவம் இவற்றை வைத்து உதவிப் பேராசிரியர் பதவியில் இருந்து இணைப் பேராசிரியராகிப் பிறகு பேராசிரியராக ஆக்குகிறார்கள். இதில் வருத்தமான செய்தி என்னவென்றால் ஆராய்ச்சி செய்வதற்கு ஊக்கத் தொகை எதுவும் வழங்குவதில்லை. இதனால் பல ஆசிரியர்களுக்கு ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற எண்ணமே வருவதில்லை. ஏனென்றால் அவர்கள் காலமுறை (PERIODICAL) பதவி உயர்வு பெற்றுவிடுகிறார்கள். ஆகையால் ஆராய்ச்சியில் முன்நிற்பவர்களுக்கு ஊதியஉயர்வு, சிறப்பு ஊதியம், கல்வி விருதுகள், தர அங்கீகாரம் (DESIGNATION) போன்ற மாற்று ஊக்க உத்திகளைப் பின்பற்றினால் திறமைகள் வெளிப்படும். இது, பலவிதமான தடைகளையும் தாண்டி "அறிவு வளர்ச்சிக்காக ஆராய்ச்சி" என்ற நிலை உருவாகும். இவைதான் இன்றைய ஆசிரியர்கள் பணிபுரிய வேண்டிய மாறுபட்ட சூழ்நிலைகள். இவை அவர்களது திறமைக்கும், அடைய வேண்டிய குறிக்கோள்களுக்கும் மிகப் பெரிய சவாலாக உள்ளன.

*முடிவுரை :*

ஆசிரியர்களுக்கு ஆதரவும், அறிவுரையும் கொடுக்க வலுவான நேசக்கரம் ஒன்று வேண்டும். இது காலத்தின் தேவை. இதனால், ஆசிரியர்கள் பெறும் ஆராய்ச்சிகள், நல்லபழக்க வழக்கங்கள், பண்பாடுகளை மாணவர்களிடம் கொடுக்க முடியும். இல்லையெனில் ஒழுக்கமில்லாத அறிவு மனித இனத்திற்குத் தீமையையே தரும்.

# சேக்சுபியரின் சில துன்பியல் நாடகங்களில் வள்ளுவரின் அறநெறிக் கருத்துக்கள்,

பா. சூரியநாராயணன்.

முன் இதழ்த் தொடர்ச்சி...

*தீயோர் ஒழிதல்:*

அன்புமிக்க தந்தையும் மகளும் இவ்வாறிருக்க மூத்த இரு பெண்களின் வாழ்கையோ விரும்பத்தகாத வேறுதிசையில் சென்றது. தங்கள் தகப்பனுக்கு வஞ்சகம் செய்த இவ்விருவரும், தங்கள் கணவன்மாரிடத்தும் உண்மையான பற்றுறுதியுடன் நடந்துகொள்ளாமல், அவர்களிடத்து அன்பு செலுத்தாமல், கடமைகளைச் செய்யாமல், புறக்கணித்தது மட்டுமன்றி, தங்களுக்கு வேறொருவரிடம் நாட்டம் இருப்பதாகவும் காட்டிக்கொண்டனர். மேலும் இருவராலும் விரும்பப்பட்டவர் ஒரே ஆள் என்பதும் தெரியவந்துவிட்டது. அந்த ஆள் காலஞ்சென்ற கிளாசுட்டர் பிரபுவின் முறைதவறிப் பிறந்த மகன் எட்மண்ட் என்பவர். தந்தைக்குப் பின் சட்டப்படி பிரபுவாக வரவேண்டிய உரிமையாளர் எட்கார் என்பவரை உரிமையினின்றும் எட்மண்ட் நீக்கிவிட்டு, தானே பிரபு என்று அறிவித்துக்கொண்டவன். இத்தகைய கொடுஞ்செயலுக்கு அஞ்சாத தீயோனுடைய அன்புக்குப் பொருத்தமான அன்பு செலுத்தியவரே நன்றிகெட்ட கானரிலும், ரீகனும் ஆவர். இந்நிலையில் ரீகனின் கணவன் கார்ன்வால்பிரபு இறந்துவிடவும், உடனே ரீகன் புதிய கிளாசுட்டர் பிரபுவைத் திருமணம் செய்யும் தனது நோக்கத்தை வெளியிட்டாள். இச்செயல் கானரிலின் பொறாமைப்பண்பை வளர்த்தது. இந்த இருபெண்களையும் தான் விரும்புவதாக எட்மண்டும் அவ்வப்போது கூறிவந்தான். ஆகையால் கானரில் பழிபாவத்துக்கஞ்சாத கொடிய ரீகனுக்கு நஞ்சுகொடுத்து ஒழித்துக்கட்ட முற்பட்டாள். ஆனால் இதனைத் தக்க சமயத்தில் கண்டுபிடித்துவிட்ட ஆல்பனி பிரவு, தன் மனைவிக்கு எட்மண்டின்மீது விருப்பம் இருப்பதை முன்பே அறிந்தவனாதலால், அவளைச் சிறையிட்டான். காதல் தோல்வியில் சினம்பொங்கிய கானரில் தற்கொலை செய்துகொண்டாள். நஞ்சு ஊட்டப்பட்ட ரீகனும் இறந்தனள்.

இவ்வாறு இவ்விருபெண்களின் கொடிய வஞ்சகமே இறைவனுடைய தீர்ப்பின்படி தண்டனை வழங்கிவிட்டது.

கொடியவருக்கு இவ்வாறு தக்க தண்டனையை இறைவனுடைய தீர்ப்பு வழங்கிவிட்டது சரியே என்றாலும், கடமை உணர்வும், அன்பும் உடைய இளையவள் கார்டிலியாவுக்கு அவள் ஆற்றிய நல்வினைகளால் அவளுக்கு நல்லதொரு தீர்ப்பு இறைவனது அருளால் கிடைத்திருக்க வேண்டும் என்பதும் உண்மையே. ஆயினும் மனிதர்களால் புரிந்துகொள்ள இயலாத தெய்வசக்தி வருந்தத்தக்க ஒரு முடிவை அவளுக்கு வழங்கிவிட்டது. கானரிலும், ரீகனும் தங்களுடைய காதலன், தகா உரிமையாளன் கிளாசுட்டர்பிரபுவின் தலைமையில் அனுப்பிய ஆங்கிலப்படைகள் பிரஞ்சுப்படைகளைத் தோற்கடித்தன. வெற்றிபெற்ற கொடியவன் எட்மண்ட் நாட்டின் ஆட்சி உரிமையைத் தான் பெறுதற்கு கார்டிலியா தடையாக இருப்பாளென்றெண்ணி அவளைக் கைப்பற்றிச் சிறையிலிட, அவளும் சிறையிலேயே தன் வாழ்க்கையை முடித்தனள். இவ்வாறு பெற்றோரிடம் அன்பு என்னும் கடமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கார்டிலியாவை உலகிற்குக் காட்டிவிட்டு இறைவன் இவளை இளமைக்காலத்திலேயே தன்னிடம் எடுத்துக்கொண்டான். இந்த நல்ல குழந்தையை இழந்தபின் லீயர் நெடுநாள் உயிர் வாழவில்லை. இறுதிவரை அவனுடன் இருந்து பணிசெய்து வந்த கென்ட் பிரபு அவனிடம் தானே கேயசு என்ற பெயரில் அவனுடன் இருந்ததாகச் சொன்னான். அரைப்பைத்திய நிலையிலிருந்த லீயர் எவ்வாறு ஒருவரே கென்ட் பிரபுவாகவும், கேயசாகவும் இருத்தல் கூடுமென்று கூறினான்; அவன் உயிர் நீத்த சின்னாளில் கென்ட் பிரபுவும் இறந்தான். கொடிய கிளாசுட்டர்பிரபுவை உரிமைபெற்ற எட்கார் பிரபு நேருக்குநேர் சண்டையில் கொன்றான். கொடுஞ் செயல்களில் ஈடுபட்டிருந்த கானரிலுக்கு உடந்தையாக இல்லாமல், ஆதரவளிக்காமல் இருந்த ஆல்பனிபிரபு கார்டிலியா இறந்ததை அறியான். அவன் லீயருக்குப் பின்னர் பிரிட்டனின் அரசனாயினன்.

– தொடரும்

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 341116